Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 21 2025

வியாழக்கிழமை 21, ஓகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 033 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



# இன்று இரதோற்சவம்...

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழாவின் இரதோற்சவம் வியாழக்கிழமை (21) இடம்பெறும்.

# “அல்-குர்ஆன்களை விடுவிக்கவும்”

**அல்-குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதிகள் இன்று இந்தியா, மலேசியா, சிங்கப்பூர். கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் ஏனைய ஆசிய நாடுகளில் எவ்வித தடைகளுமின்றி விநியோகிக்கப்பட்டுள்ளது**



சவூதி அரேபியாவில் இருந்து அனுப்பப்பட்ட புனித அல்குர்ஆன் பிரதிகள் அடங்கிய கொள்கலன் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக விடுவிக்கப்படாது இலங்கை சுங்கத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த கொள்கலனை விரைவாக விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இலங்கை தொழில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (20) அன்று இடம்பெற்ற நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் கேள்வி யெழுப்பி உரையாற்றுகையிலேயே மஸ்தான் எம்.பி இதனை கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

புனித அல்-குர்ஆனை அரபு மொழியில் மீள் பிரசுரிக்கவும் ஏனைய மொழிகளில் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கும் உத்தியோகபூர்வமான உரிமை சவுதி அரேபியா அரசின் "மன்னர் பஹத் அல்-குர்ஆன் பிரசுரிப்பு நிலையம்" கொண்டுள்ளதை உலகின் அனைத்து நாடுகளிலும் பரந்து வாழும் 200 கோடி முஸ்லிம் மக்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளதுடன், உலகின் அனைத்து நாடுகளும் அங்கீகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

# சர்வதேச தபால்கள் BIA-வில் தேக்கம்

தபால் ஊழியர்களின் தொடர்ச்சியான வேலைநிறுத்தம் காரணமாக, பல்வேறு நாடுகளிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஏராளமான கடிதங்கள் மற்றும் பொதிகள் புதன்கிழமை (20) நண்பகல் 12.00 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (BIA) சரக்கு மையத்தில் குவிந்துள்ளன.

சர்வதேச தபால்களின் குவிப்பு அத்தியாவசிய ஆவணங்கள் மற்றும் பொதிகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுவது குறித்து கவலைகளை எழுப்பியுள்ளது. ஏனெனில், வேலைநிறுத்தம் நாடு முழுவதும் தபால் நடவடிக்கைகளைத் தொடர்ந்து பாதிக்கிறது.



# சூத்திரதாரி யார்?



தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் கணினிகளில் இருந்த தரவுகள் அழிக்கப்பட்டதால் பாரியளவான மோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அன்று காணப்பட்டன.இந்த சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி யார் என்பது நீதிமன்ற விசாரணைகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் என சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் ஹன்ஷக விஜேமுனி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (20) அன்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# அரைகுறை ஆடையணிந்து அதிரடியான அறிவிப்பு



போராட்டத்தில் ஈடுபட்ட தபால் ஊழியர் ஒருவர், அரைகுறையாக உடையணிந்த ஊடகங்களுக்குப் பேட்டி கொடுக்கையில், நடந்து வரும் தபால் வேலைநிறுத்தம் குறித்து பொய்யான தகவல்களுடன் பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவதாகக் குற்றம் சாட்டினார்.

அதிகாரிகள் போதுமான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கத் தவறிவிட்டதாகவும், அதே நேரத்தில் அமைச்சர் தபால் மற்றும் அதிகாரிகள் "ஊழியர்களை முட்டாளாக்கி முழு நாட்டிற்கும் பொய் சொல்கிறார்கள்" என்றும் அவர் கூறினார்.


தற்போதைய 600 ரூபாய் கொடுப்பனவில் சீருடை தைக்க முடியுமா என்றும் ஊழியர் கேள்வி எழுப்பினார்.

“சீருடை கொடுப்பனவு, மிதிவண்டி கொடுப்பனவு மற்றும் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரமாக நியமிக்க வேண்டும் என்று நாங்கள் கோரியுள்ளோம். அதற்கு பதிலாக, அதிகாரிகள் கைரேகை மற்றும் கூடுதல் நேரம் பற்றித் தொடர்ந்து பேசுகிறார்கள்," என்று அவர் கூறினார்.

சீருடையைத் தைக்க ரூ.600 மற்றும் மிதிவண்டி கொடுப்பனவாக ரூ.250 மட்டுமே வழங்கப்படுவதாகத் தெரிவித்த அவர், இந்தத் தொகைகள் போதுமானதாக இல்லை என்று வாதிட்டார்.

தொடர்ச்சி P2

# “யாழ். பலாலி விமான நிலையத்தை மாற்றுவோம்”



யாழ். பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைப்பதற்கே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்றும், எனினும் முறையான வணிக திட்டமிடல்கள் இன்றி அதனை செய்ய முடியாது என்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (20) அன்று இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனால் பலாலி விமான நிலையம் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

## மலையகப் பகுதியில்

# “52 சதவீதமானோர் ஏழ்மையில் உள்ளனர்”



மலையகப் பகுதியில் 52 சதவீதமானோர் நீண்டகால ஏழ்மை நிலையில் உள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்தார்.

சமூக கட்டமைப்பில் ஏழ்மை ஒழிப்பு மற்றும் சமூக வலுவூட்டலை வினைத்திறனாக்குவதற்காகவே சமுர்த்தி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

# ராஜிதவுக்கு 60(1)கீழ் உத்தரவு



கடந்த ஜூன் மாதம் முதல் தலைமறைவாக இருப்பதாகக் கூறப்படும் முன்னாள் மீன்வள அமைச்சர் ராஜித சேனாரத்னவை ஆகஸ்ட் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க புதன்கிழமை(20) அன்று உத்தரவிட்டார்.

ஒரு மாதத்திற்கும் மேலாக பிடியாணை பெற்றுள்ள ராஜித சேனாரத்னவை கைது செய்ய முயற்சித்த போதிலும், சந்தேக நபர் தொடர்ந்து தலைமறைவாக இருப்பதால் கைது தோல்வியடைந்ததாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அளித்த ஆதாரங்களை பரிசீலித்த பின்னர், இந்த உத்தரவை பிறப்பித்தது.

1979 ஆம் ஆண்டு 15 ஆம் எண் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் துணைப்

தொடர்ச்சி P2

# சிங்கப்பூர் சிவில் சேவை கல்லூரிக்கு சஜித் விஜயம்




அரச ஊழியர்களின் பயிற்சி தொடர்பில் ஆராயும் நோக்கில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுச் சேவைத் துறை ஊழியர்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்போடு செயல்பட்டு வரும் முன்னணி நிறுவனமான சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரிக்கு (Civil Service College, Singapore) புதன்கிழமை (20) அன்று விஜயம் செய்தார்.

இவ்விஜயத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் *Christopher Joachim pragasm (Director - International Relations)* மற்றும் *Tan Chuan Tat Daniel (Assistant Director - Civil Service College International)* ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

தொடர்ச்சி P2



# மனைவியை கேட்டு கம்பத்தில் ஏறிய கணவன்

வெளிநாட்டில் பணிபுரியும் தனது மனைவியை மீட்டு வரவழைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, ஒரு நபர் மின் கம்பத்தின் மேல் ஏறியதால் கறுவாத்தோட்ட பொலிஸ் பிரிவிலுள்ள அந்த இடத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு காவல்துறையினரும் தீயணைப்புப் படையினரும் வரவழைக்கப்பட்டு, கூட்டு நடவடிக்கையின் மூலம் அந்த நபரை பாதுகாப்பாக கீழே இறக்கினர்.

பல மணி நேரத்திற்குப் பிறகு, அவர் காயமின்றி மீட்கப்பட்டார்.

சம்பவத்தின் போது ஊடகங்களுக்குப் பேசிய அந்த நபர், தனது மூன்று குழந்தைகளும் தங்கள் தாய் தங்கள் முன்பாக இல்லாமல் சிரமப்படுவதாகவும், அவரை இலங்கைக்குத் திரும்புவதற்கு வசதி செய்யுமாறு அதிகாரிகளை வலியுறுத்தினார் என்றும் விளக்கினார்.

சம்பவம் குறித்து மேலும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மனு நிராகரித்த பின் தென்னகோன் கைது



2022ஆம் ஆண்டு ‘கோட்டா கோ காமா’ மக்கள் போராட்டத்தின் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணையின் போது கைது செய்யப்படும் அபாயம் இருப்பதாகக் கூறி, பணியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் ஐ.ஜி.பி. தேசபந்து தென்னகோன் தாக்கல் செய்த முன்பிணை மனுவை கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “அல்குர்ஆன்களை விடுவிக்கவும்”

உஸ்மானிய கிலாபத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட இந்த புனிதப் பணிக்கான பதிப்புரிமையும், தனித்துவத்தன்மையும், புனிதத்துவமும் களங்கமின்றி இன்றுவரை பேணிக்காக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலம், பிரேன்சு, ஜேர்மனி, ரஷ்யா, சீனா, ஸ்பானிய, ஹிந்தி, உருது. சிங்களம், தமிழ், ஜப்பான், மலையாளம், கொரியா, நேபாளம் உள்ளிட்ட ஐம்பதிற்கும் அதிகமான மொழிகளில் இந்த இறை வேதம் மொழிபெயர்க்கப்பட்டு எவ்வித அடிக்குறிப்புக்களோ அல்லது தனிக்கைகளோ இன்றி மக்கள் கைகளை அடைந்துள்ளது. இந்தப் பின்னணியில் இரு புனிதத் தலங்களின் பணிப்பாளர் சவூதி அரசின் அப்போதைய மன்னர் பஹத் பின் அப்துல் அஸீஸின் பணிப்புரையில் இஸ்லாமிய அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மார்க்கத் தீர்ப்புத் துறையின் பிரதம பிரசாரகர் அஷ்ஷேக் முஹம்மது இக்பால் மதனீயின் தலைமையில் இந்த தமிழ் மொழிபெயர்ப்புப் பணி முன்னெடுக்கப்பட்டது. இந்த தமிழ் மொழிபெயர்ப்பை ஒப்பு நோக்கிச் சரிபார்க்கும் பணியில் இலங்கையைச் சேர்ந்த தலைசிறந்த உலமாக்களான, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் (மறைந்த) பொதுச் செயலாளர் அஷ்ஷேக் முஹம்மது மக்தூம் அஹ்மது முபாரக் உள்ளிட்ட, பேராசிரியர் அஷ்ஷேக் முஸ்தபா மௌலானா, அஷ்ஷேக் அபூபக்கர் ஸித்தீக், கபூரிய்யா அரபுக் கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் அஷ்ஷேக் நூருல் ஹம்ஸா முஹம்மது ஸயீத் ஆகியோர் 1993ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டமை எமது நாட்டுக்குக் கிடைத்த கௌரவமாகும்.

இந்த புனித அல்-குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதிகள் இன்று இந்தியா, மலேசியா, சிங்கப்பூர். கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் ஏனைய ஆசிய நாடுகளில் எவ்வித தடைகளுமின்றி விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் வடிவில் பல்வேறு வலைத்தளங்களிலும் பதிவேற்றப்பட்டுள்ளன. இந் நிலையில் 2024 மே மாதம் 16 ஆம் திகதி இலங்கை சுங்கத் திணைக்களத்தில் புனித அல்குர்ஆன் பிரதிகளைச் சுமந்த கொள்கலன் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இந்த கொள்கலனில் இருந்த ஆவணங்களில் அரபு மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு பிரதிகளின் எண்ணிக்கை என்ன?

அவற்றில் இதுவரை எத்தனை அல்-குர்ஆன் பிரதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன?. எத்தனை பிரதிகள் விடுவிக்கப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளன? அதற்கான காரணம் என்ன? என்றும் வினவினார்.

## “யாழ். பலாலி விமான நிலையத்தை மாற்றுவோம்”

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தற்போது தினசரி இரண்டு விமான சேவைகள் சென்னை மற்றும் திருச்சி விமான நிலையங்களில் இருந்து இடம்பெறுவதுடன், அந்த விமான சேவைகளில் பயணிகள் ஆசன எண்ணிக்கை 70 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஜூலை வரையில் யாழப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்த விமானங்களின் எண்ணிக்கை தொடர்பில் கூறுவதாயின் 2020ஆம் ஆண்டில் 140 விமானங்கள், 2021இல் 32 விமானங்கள், 2022இல் 383 விமானங்கள், 2023இல் 864 விமானங்கள், 2024இல் 1156 விமானங்கள் வந்து சென்றுள்ளதுடன், 2025 ஜூலை 31ஆம் ஆண்டு வரையில் 752 விமானங்கள் வருகை தந்துள்ளன.

அத்துடன், இந்த விமானங்களை பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கை தொடர்பில் கூறுவதாயின்

2020ஆம் ஆண்டில் 3,491 பயணிகளும்,
2021ஆம் ஆண்டில் 110 பயணிகளும்,
2022ஆம் ஆண்டில் 881 பயணிகளும்,
2023ஆம் ஆண்டில் 29,717 பயணிகளும்
2024ஆம் ஆண்டில் 40,680 பயணிகளும்,
2025ஆம் ஆண்டில் ஜூலை வரையில் 31,917 பயணிகளும்

இந்த விமானங்களில் பயணித்துள்ளனர். இந்த சிறியளவிலான விமானங்களில் குறிப்பிட்டளவிலான பயணிகள் ஆசனங்கள் இருந்தாலும் குறிப்பிடத்தக்க வசதிகள் வழங்கப்படுகின்றன.

இதேவேளை, 2021ஆம் ஆண்டில் இந்த விமான நிலையத்தினால் லாபம் இருக்கவில்லை. 41 மில்லியன் ரூபாய் நஷ்டம் இருந்தது. 2022இல் 5 மில்லியன் வருமானம் கிடைத்தாலும், 82 மில்லியன் ரூபாய் செயற்பாட்டு நஷ்டமாக இருந்தது. 2023ஆம் ஆண்டில் 152 மில்லியன் ரூபாய் இலாபம் இருந்தது. 2024இல் 286 மில்லியன் ரூபாய் வருமானமும், செயற்பாட்டு லாபமாக 76 மில்லியன் ரூபாயாக இருந்தது. அத்துடன் 2025 ஜூலை வரையில் 197 மில்லியன் ரூபாய் ய் வருமானமும் செயற்பாட்டு லாபமாக 67 மில்லியன் ரூபாய் கிடைத்துள்ளது.

இந்த விமான நிலையத்தில் இலங்கை விமான சேவைகள், விமான நிலையங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த 76 பேரும், சுங்கம், வெளிநாட்டு சேவைகள், சுற்றுலாத்துறை, பொலிஸ் உள்ளிட்ட வேறு நிறுவனங்களைச் சேர்ந்த 182 பேரும் பணியாற்றுகின்றனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் பெரியளவிலான விமானங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டுமாயின், பெரியளவிலான விமான ஓடுபாதை, விமான நுழைவு பகுதி, விமானங்களை நிறுத்தி வைக்கும் பகுதி மற்றும் பயணிகள் பகுதி உள்ளிட்ட நிர்மாணங்களுக்காக வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்பதுடன், மேலதிக காணிகளையும் கையகப்படுத்த வேண்டியும். இங்கு ஆய்வுகளை நடத்தி அது தொடர்பான அறிக்கைகளை பெற்றே அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். அங்கே தற்போது பயணிகளை வரவேற்க, வழியனுப்ப செல்லும் உறவினர்களுக்காக அங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அங்கு தற்காலிக டென்ட் ஒன்று அமைக்கப்பட்டிருந்தாலும் நிரந்த நிர்மானமொன்றை வரும் மாதங்களில் அதனை செய்வோம் என்றார்.

## ராஜிதவுக்கு 60(1)கீழ் உத்தரவு

பிரிவு 60 (1) இன் கீழ் சிங்களம் மற்றும் தமிழில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சந்தேக நபராக ராஜித சேனாரத்னவுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட புகாரை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கவும், அதே நாளில் அவர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் சிங்களம் மற்றும் தமிழில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவு தொடர்பான வெளியீடு, சந்தேக நபர் ராஜித வசிக்கும் மற்றும் சுற்றித் திரியும் இடங்களில் காட்சிப்படுத்தப்படும், மேலும் உத்தரவு தொடர்பான வெளியீடு கொழும்பு நீதவான் நீதிமன்றத்திலும் காட்சிப்படுத்தப்படும்.

## அரைகுறை ஆடையணிந்து அதிரடியான அறிவிப்பு

தொடர்ச்சியான வேலைநிறுத்தத்திற்கான காரணங்கள் குறித்து அதிகாரிகள் தவறான தகவல்களைப் பரப்புவதாகவும் அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

19 முக்கிய கோரிக்கைகளுடன் ஞாயிற்றுக்கிழமை (17) அன்று தொடங்கப்பட்ட வேலைநிறுத்தம், ஜனாதிபதி செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (19) அன்று நடைபெற்ற கலந்துரையாடலுக்கு பிறகும் தொடர்கிறது. தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்று அஞ்சல் தொழிற்சங்கங்கள் உறுதிப்படுத்தின.

சர்வதேச தபால்களின் குவிப்பு அத்தியாவசிய ஆவணங்கள் மற்றும் பொதிகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுவது குறித்து கவலைகளை எழுப்பியுள்ளது.

ஏனெனில், வேலைநிறுத்தம் நாடு முழுவதும் தபால் நடவடிக்கைகளைத் தொடர்ந்து பாதிக்கிறது.

## மொனராகலை விபத்தில் காயமடைந்தவர் மரணம்

சுமணசிறி குணதிலக்க

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஹத அராவ பிரதேசத்தில் கடந்த 12ஆம் திகதி இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை (19) மாலை உயிரிழந்துள்ளார்.

மொனராகலை, கொடியாகல பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய கோனார முதியன்சேலாகே விஜயநாயக்க 45 என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மொனராகலையில் இருந்து பஹத அராவ வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் வலதுபுறம் திரும்ப முயன்றபோது இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மோதிக்கொண்டுள்ளன.

காயமடைந்த இருவரும் மொனராகலை மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதேநேரத்தில், கவலைக்கிடமான நிலையிலிருந்த குறித்த நபர் பதுளை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதில் காயமடைந்த மற்றைய சைக்கிள் ஓட்டுநரான கரிகொல்ல, வெதிகும்புர பகுதியைச் சேர்ந்த ஸ்ரீ லால் நாணயக்கார என்பவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சூத்திரதாரி யார்?

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபையின் கணினிகளில் இருந்த தரவுகள் அழிக்கப்பட்ட சம்பவம் 2021.07.09 ஆம் திகதியன்று அறிக்கையிடப்பட்டது.இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் அடிப்படையில் எபிக் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான தரிந்து தர்ஷன என்பவர் 2021.08.09 ஆம் திகதியன்றும், அந்நிறுவனத்தின் வாடிக்கையாளர் பிரிவின் உதவி பொறியியலாளரான திலுப ராமநாயக்க என்பவர் 2021.09.29 ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டார்.கு

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை 2021.07.28ஆம் திகதியன்று குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அளித்த முறைப்பாட்டுக்கமைய குற்றப்புலனாய்வு பிரிவின் டிஜிட்டல் தடயவியல் பிரிவு கொழும்பு நீதவான் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தது.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுக்கு சாட்சிமளித்த இரண்டாம் சந்தேக நபரான திலுப ராமநாயக்க என்பவர் தமது செயற்பாடுகளினால் கணினி கட்டமைப்பில் இருந்த தரவுகள் அழிக்கப்பட்டதாக எழுத்துமூலமாக ஒப்புதலளித்துள்ளார்.இதுவும் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தரவுகள் அழிக்கப்பட்டதால் பாரியளவான மோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அன்று காணப்பட்டது.இந்த சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி யார் என்பது நீதிமன்ற விசாரணைகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் என்றார்.

## ஐஸ் வியாபாரிகள் இருவர் கைது

கனகராசா சரவணன்

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு கொண்டுவரப்பட்ட போதை பொருளை வியாபாரத்திற்காக எடுத்துச் சென்ற இருவர் புதன்கிழமை (20) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டு. தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸார், நகரப் பகுதி திருகோணமலை வீதியில் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கொழும்பில் இருந்து பேருந்தில் வந்த பல்லைக்கழக மாணவர் ஒருவர் போதைப் பொருளை கொண்டு வந்து குறித்த வியாபாரிகளிடம் வழங்கிய நிலையில் அதனை வாங்கிக் கொண்டு வரும்போது சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பூம்புகார் லயன்ஸ் கிளப் வீதி மற்றும் கருவப்பங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர்கள் எனவும் அவர்களிடமிருந்து 3,700 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 640 ரூபாய் பணம், 2 கையடக்க தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## “52 சதவீதமானோர்...

சிறந்த தெரிவுகளின் அடிப்படையில் தான் தற்போது சமுர்த்தி நலன்புரி திட்டம் வழங்கப்படுகிறது என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (20) அன்று நடைபெற்ற சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

1995ஆம் ஆண்டு சமுர்த்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு 01ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் பிரகாரம் திவிநெகும திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. சமுர்த்தி அதிகார சபை, மேல்நாட்டு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஸ்ரீலங்கா தெற்கு அபிவிருத்தி நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றை ஒன்றிணைத்தே 2013ஆம் ஆண்டு 01ஆம் இலக்க திவிநெகும திணைக்களம் உருவாக்கப்பட்டது.

பிற்பட்ட காலத்தில் 2017ஆம் ஆண்டு 02ஆம் இலக்க திவிநெகும (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம் திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமாக மாற்றப்பட்டது. இன்று சுமார் 40 இலட்சம் பயனாளர்கள் சமுர்த்தி திட்டத்தில் உள்ளார்கள். 250 பில்லியன் ரூபாய் நிதி இருப்பினை சமுர்த்தி திட்டம் கொண்டுள்ளது.

நடைமுறையில் உள்ள சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி மற்றும் சொத்து தொடர்பான விபரங்கள் கணக்காய்வு செய்யப்படவில்லை. அரசியலமைப்பின் 154ஆவது ஏற்பாடு மற்றும் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி வங்கிகளின் நிதி விவகாரங்கள் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி வங்கிகள் முறையாகக் கணக்காய்வு செய்யப்படாத காரணத்தால் பல சிக்கல்கள் ஏற்பட்டன. இதுவரையான காலப்பகுதியில் உள்ளக கணக்காய்வுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன. உள்ளக கணக்காய்வுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாடு காணப்படுகிறது. ஆகவே நிதி ஒழுக்கத்தைப் பேணுவதற்காகவே இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

சமூக கட்டமைப்பில் ஏழ்மை ஒழிப்பு மற்றும் சமூக வலுவூட்டலை வினைத்திறனாக்குவதற்காகவே சமுர்த்தி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறந்த தெரிவுகளின் அடிப்படையில் தான் தற்போது சமுர்த்தி நலன்புரி திட்டம் வழங்கப்படுகிறது.

மலையகப் பகுதியில் 52 சதவீதமானோர் நீண்டகால ஏழ்மை நிலையில் உள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## சிங்கப்பூர் சிவில் சேவை கல்லூரிக்கு சஜித் விஜயம்

தலைமைத்துவம், கொள்கை புத்தாக்கம் மற்றும் எதிர்கால முன்னாய்த்தம் என்பனவற்றில் வலுவான கவனத்தைச் செலுத்தி, பயனுள்ள மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட அரச நிர்வாகத்தைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் சிங்கப்பூரில் பொதுச் சேவைத் துறையினரை தயார்படுத்தும் பணியில் இந்த சிவில் சேவைக் கல்லூரி முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த அறிவையும் அனுபவத்தையும் நமது நாட்டின் அரச நிர்வாகக் கட்டமைப்பில் ஏற்புடையதாக்கிக் கொள்வது குறித்து அறிந்து கொள்ளும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இக்கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தின் போது, சிங்கப்பூர் சிவில் சேவை கல்லூரியின் சிரேஷ்ட அதிகாரிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை மரியாதையுடன் வரவேற்றனர். பொதுக் கொள்கை அபிவிருத்தி, ஆளுகை மற்றும் அரச நிர்வாக பயிற்சி ஆகியவற்றில் ஒத்துழைப்புகளுடன் இணைந்து பணியாற்ற முடியுமான பல துறைகள் குறித்த முதற்கட்ட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இலங்கையில் அரச அதிகாரிகளின் திறன் மேம்பாட்டின் முக்கியத்துவத்தை இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டி, சிங்கப்பூரின் வெற்றிப் பயணத்தில் ஒழுக்க விழுமியம் மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட அரச சேவை பெரும் பங்காற்றியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இதன் பிரகாரம், இலங்கையின் கொள்கை வகுப்பாக்கம் மற்றும் ஆளுகைச் சட்டகத்தை வலுப்படுத்துவதற்கு சிங்கப்பூரின் சிறந்த நடைமுறைகளை இலங்கைக்கு ஏற்றாற் போல் மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வதில் தான் ஆர்வமாக இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## மனு நிராகரித்த பின் தென்னகோன் கைது

புதன்கிழமை (20) அன்று நிராகரித்தார்.

சம்பவத்தில் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ள தேசபந்து தென்னகோன், முன்பிணையில் விடுவிக்கப்பட்டால் விசாரணையைத் தடுக்கவோ அல்லது விசாரணையைத் தடுக்கவோ மாட்டேன் என்று நீதிமன்றத்தை திருப்திப்படுத்தத் தவறிவிட்டார் என்பதை வலியுறுத்திய நீதவான், தொடர்புடைய முன்பிணை மனுவை நிராகரித்தார்.

2022ஆம் ஆண்டு ‘கோட்டா கோ கம’ மக்கள் போராட்டத்தின் மீதான தாக்குதல் நடந்த நேரத்தில், தேசபந்து தென்னகோன் மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான மூத்த டி.ஐ.ஜியாக செயல்பட்டு வந்தார். சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, தேசபந்து தென்னகோனை சந்தேக நபராகப் பெயரிடுமாறு சட்டமா அதிபர் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு காலி முகத்திடலில் அமைதியான போராட்டக்காரர்களைத் தாக்கியவர்களுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் புதன்கிழமை(20) மாலை கைது செய்யப்பட்டார்.

# இந்த மூவரையும் உங்களுக்குத் தெரியுமா?

கிரிபத்கொட காவல் நிலையத்தால் 2025.07.21 அன்று, நடத்தப்பட்ட சோதனையின் போது, T-56 துப்பாக்கி வைத்திருந்த ஒரு சந்தேக நபர் முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தார். சந்தேக நபரால் வெளிப்படுத்தப்பட்ட தகவலின் அடிப்படையில், வவுனியா பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகள் கைக்குண்டுகளுடன் ஒரு சந்தேக நபரைக் கைது செய்தனர்.


மேற்கண்ட சந்தேக நபர்கள் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டனர், மேலும், விசாரணைகளில் கைக்குண்டுகளை வைத்திருந்த மற்றொரு சந்தேக நபர் மற்றும் அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்கள் பற்றிய தகவல்கள் தெரியவந்தது.

அதன்படி, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்ய வவுனியா பகுதிக்குச் சென்றிருந்தது. அதற்குள், சந்தேக நபர்கள் தங்கள் வசிப்பிடப் பகுதிகளை விட்டு வெளியேறிவிட்டனர். மூன்று சந்தேக நபர்களின் விவரங்கள் பின்வருமாறு.

01. முழுப் பெயர்: ஜீவரசா சுஜீபன்
வயது: 30 வயது
முகவரி: காந்தி நகர், நேரியகுளம், வவுனியா.
தேசிய அடையாள அட்டை: 950554215V

02. முழுப் பெயர்: இளங்கோ இசைவின்
வயது: 27 வயது
முகவரி: இலக்கம் 379, 3ஆம் பிளாக், மெனிக்பாம், செட்டிகுளம்.
தேசிய அடையாள அட்டை: 199836210402

03. முழுப் பெயர்: மகேந்திரன் யோகராசா
வயது: 27 வயது
முகவரி: அரளி மேற்கு, வடுகோட்டை





தேசிய அடையாள அட்டை: 981633881V

மேலும் சந்தேக நபர்கள் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால் பின்வரும் தொலைபேசி எண்களுக்குத் தெரிவிக்குமாறு காவல்துறை பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறது.

தொலைபேசி எண்:
* பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு 071-859 1966
புலனாய்வுப் பிரிவு 071-859 6150

மேற்கண்ட அறிவிப்புக்கு ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

# கிரிகெட் உபகரணங்கள் வழங்கி வைப்பு




■ மு.இராமசந்திரன்

இலங்கை கிரிக்கெட் சபை (SLC) நாடு முழுவதும் 25 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் மேற்கொண்டுள்ள கிரிக்கெட் வில்லேஜ் திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 22 பாடசாலைகளுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஹட்டன் லா எடம்ஸ் மண்டபத்தில் புதன்கிழமை (20) அன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், நுவரெலியா கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் ஆர். பிரபாகரன், நுவரெலியா கிரிக்கெட் சங்கத்தின் துணைத் தலைவர் ஜெஸ்டா சசி ரத்னாயக , துணைத் தலைவர் சங்கர் மணிவண்ணன் மற்றும் ஹட்டன் கல்வி வலயத்தின் பணிப்பாளர் நாமல் சந்தன கருணாரத்ன மற்றும் பாடசாலை மாணவர்கள் விளையாட்டுத்துறை ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கிரிகெட் விளையாட்டுக்கான உபகரணங்கள் மற்றும் கிரிகெட் விளையாடும் 142 மாணவர்களுக்கான பாதணிகளும் இதன் போது வழங்கப்பட்டன.

நாடளாவிய ரீதியில் சகல மாவட்டங்களிலும் கிரிகெட் வில்லேஜ் திட்டத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆர்ப்பாட்டம்




■ நிதர்ஷன் வினோத்

ஒப்புக்கொள்ளப்பட்ட MCA கொடுப்பனவை உடனடியாக வழங்கு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த ஆர்ப்பாட்டத்தை புதன்கிழமை (20) அன்று மேற்கொண்டது.

நாடு முழுவதும் உள்ள அரச பல்கலைக்கழகங்கள் இந்த அடையாள வேலை நிறுத்த ஆர்ப்பாட்டத்தை நாடாத்தியுள்ளதுடன், இதன்போது, நீக்கி விடப்பட்ட 20%ஐ உடனடியாக வழங்கு, அதிகரிக்கப்பட்ட இடர் கடனை உடனடியாக வழங்கு, மக்களாட்சி அரசாங்கம் பேச்சுவார்த்தையைத் தவிர்த்து வருகிறது, ஆகிய கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டது.

மேலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மாவனெல்ல யுவதி மாயம்



மாவனெல்ல பொலிஸ் பிரிவில் உள்ள கெடப்பா, கலத்தரா என்ற முகவரியில் வசிக்கும் யுவதி ஒருவர் 2025.07.28 முதல், காணாமல் போனமை தொடர்பாக யுவதியின் பெற்றோர் மாவனெல்ல பொலிஸ் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் விசாரணை நடந்து வருகிறது.

இந்த யுவதியின் விவரங்கள் பின்வருமாறு,
பெயர்: எதிரிசிங்க தருஷி செவ்வந்தி திசாநாயக்க.
வயது: 21
முகவரி: கெடப்பா, கலத்தரா

குறித்த இளம் பெண்ணைக் கண்டுபிடிப்பதில் பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடுவதுடன், அவரது புகைப்படத்தை உங்களுக்கு அனுப்புகிறது. இந்த இளம் பெண்ணைப் பற்றி ஏதேனும் தகவல் இருந்தால், 071 859 1418 என்ற தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

# வேட்டையாடிய இருவர் கைது

■ அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டம், சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள தெஹிவத்தை பகுதியில், சட்டவிரோத கட்டுத்துவக்கு மற்றும் வேட்டையாடப்பட்ட ஆமடில்லா (அளுங்கு) எனும் மிருகம் ஆகியவற்றுடன் இருவர் செவ்வாய்க்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சேருநுவர - தெஹிவத்தை பகுதியைச் சேர்ந்த 53,45 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சேருநுவர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது, கட்டுத்துவக்குடனும் வேட்டையாடப்பட்ட அலுங்கு மிருகத்துடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் சேருநுவர பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.



# நீதிபதிக்கும் மனைவிக்கும் விளக்கமறியல்

■ பாறுக் ஷிஹான்

இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதான கல்முனை காதி நீதிமன்ற நீதிபதி மற்றும் அவரது மனைவி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 25 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளாது.

கடந்த திங்கட்கிழமை (18) மாலை அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பகுதியில் இயங்கி வந்த கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் அமைந்துள்ள அலுவலகத்தில் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் அடிப்படையில், கல்முனை குவாஷி நீதிமன்ற நீதிபதியும் இதற்கு உடந்தையாக செயற்பட்ட அவரது மனைவியும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

வழக்கு ஒன்றுக்காக தன்னிடம் 2,300 ரூபாய் பணம் இலஞ்சமாக கேட்பதாகப் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய மாறுவேடத்தில் மருதமுனை பகுதியில் இயங்கி வந்த குவாஷி நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் அமைந்துள்ள அலுவலகத்தில் அருகில் மாறு வேடத்தில் காத்திருந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு அதிகாரிகள் நீதிபதி மற்றும் மனைவியை கைது செய்தனர். சந்தேக நபர்கள் 2,300 ரூபாவினை இலஞ்சமாக பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்ததுடன், சந்தேக நபர்கள் புதன்கிழமை(19) அன்று கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர். இதன்போது கல்முனை காதி நீதிமன்ற நீதிபதி மற்றும் அவரது மனைவியை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.







# மாம்பழ திருவிழா



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழாவின் 22ஆம் நாள் திருவிழாவான மாம்பழ திருவிழா (தண்டாயுதபாணி உற்சவம்) செவ்வாய்க்கிழமை (19) அன்று சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து, பிள்ளையாரும் முருகப்பெருமானும் வெளி வீதி உலா வந்தனர்.

இந்த மாம்பழ திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர். அத்தோடு முருகப் பெருமான் தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி இருந்தார்.





# இலத்திரனியல் வருகை பதிவும்; அஞ்சும் அரச ஊழியர்களும்

பெரும்பாலான தனியார் நிறுவனங்களில், கடமைக்கு வரும் நேரத்தையும், கடமை முடிந்து செல்லும் நேரத்தையும் உறுதி செய்யக் கைவிரல் அடையாளம் வைப்பது நடைமுறையில் உள்ளது. எனினும், அரச நிறுவனங்களில் அவ்வாறான நடைமுறை இல்லை. அதனை, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமுல்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

தபால் துறை ஊழியர்கள் இதனை செய்ய மறுத்து தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். “வருகைப் பதிவை உறுதி செய்ய விரல் அடையாளம் கட்டாயம். அப்படி அதனை செய்ய விரும்பாதவர்கள் வேறு தொழிலை நாடலாம்” என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

அரச நிறுவனங்கள் பலவற்றில், அரச உத்தியோகஸ்தர்களின் வருகை மற்றும் கடமையில் இருக்கும் நேரம், வெளியேறும் நேரம் போன்றவற்றில் ஏற்பட்டிருக்கும் குளறுபடியான நிலைமையை அவதானித்தே, அரசாங்கம் விரல் அடையாளத்தைப் பெற்றுக்கொள்வதைக் கட்டாயமாக்கி இருக்கலாம்.

தாங்கள், இதுவரை காலமும், நேரத்துக்கு வருகைதந்து, நேரத்துக்கே வெளியேறியிருக்கின்றோம். எவ்விதமான மோசடிகளிலும் ஈடுபடவில்லை என்றால், விரல் அடையாளத்தை வைப்பதற்கு ஏன்? அஞ்சவேண்டும். அந்த திட்டங்கத்துக்கு எதிர்ப்பை தெரிவிக்கவேண்டும். ஆக, ஏதோவொன்று இருக்கிறது.

பெருநகரங்களில் பலரும் இரண்டு, மூன்று வேளைகளை ஒரே நேரத்தில் செய்கின்றனர். சிலர் கடமையை முடித்துக்கொண்டு, பிற வேளைகளில் ஈடுபடுகின்றனர். இன்னும் சிலர், கடமை நேரத்திலேயே பிறவேளைகளில் ஈடுபடுகின்றனர். இதுதான் உண்மையாகும், ஆகையால், பொதுமக்கள் தங்களுக்கான முறையான சேவைகளை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர்.

அதுமட்டுமன்றி, நேரத்துக்குக் கடமைக்கு சமூகமளிக்க வேண்டும். அதற்கு விரல் அடையாளம் வைக்கும் முறையே சிறந்ததாகும். ஆனால், நேரத்துக்கு கடமைக்கு சமூகமளிக்காதவர்கள், நேரகாலத்துடன் வீடுகளுக்குச் சென்றுவிடுவோர், இதனால் சிக்கிக்கொள்வார்கள் என்பது வெளிச்சமாகும். அதேபோல, மேலதிக நேர வேலைசெய்ததாக, பொய்யான நேரங்களைக் குறிப்பிடுவோரும் சிக்கிக்கொள்வார்கள்.

பல நாடுகளிலும் அரச, தனியார் நிறுவனங்களில் பெரும்பாலானவை டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளது. தரவுகளைத் திரட்டிக்கொள்வதற்கும், மனித வளத்தை குறைத்துக்கொள்வதற்கும் இவ்வாறான செயன்முறை இலகுவானதாக இருக்கும். ஆகையால் எவ்வாறான எதிர்ப்புகள் வந்தாலும் முதுகெலும்புடன் நின்று, இந்த திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தவேண்டும். அதனூடாக அரச திணைக்களங்களில் இருந்து, சிறந்த சேவைகளைப் பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும்.

தாங்கள் நேர்மையாக நேரம் தவறானது சேவையாற்றுகின்றோம் என்பதில் உறுதியாக இருக்கும் எந்தவொரு அரச திணைக்களங்களைச் சேர்ந்தவர்களும் இந்த “வருகைப்பதிவை உறுதி செய்ய விரல் அடையாளம் கட்டாயம்” என்பதற்கு எதிர்ப்பை தெரிவிக்கமாட்டார்கள்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ‘கொப்பி பேஸ்ட்’ மட்டுமே அனுரகுமார அரசின் நடவடிக்கை

**முருகானந்தன் தவம்**

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசு ‘நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக’ அரசுக்குள் முரண்பாடுகள், அரசு மீதான குற்றச் சாட்டுக்கள், சர்ச்சைகள், விமர்சனங்கள், கிண்டல்கள் என ஏதோவொன்றுக்குள் சிக்கி வருகின்றது. ஒரு சிக்கலுக்குள் இருந்து விடுபடுவதற்குள் இன்னொரு சிக்கலுக்குள் மாட்டுப்பட்டு எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கும் பிரசாரங்களுக்கும் நன்றாகத் தீனி கொடுப்பதே அரசின் நிலையாகவுள்ளது.

அனுரகுமார அரசு ஆட்சி அரியணை ஏறிய நாள் முதல் கலாநிதிப் பட்டம், அரிசி, தேங்காய், குரங்கு, உப்பு, பாதாள உலகம், படுகொலைகள், சர்வாதிகாரம், இந்தியப் பிரதமரின் வருகை, ஜனாதிபதியின் இந்திய, சீன விஜயங்கள், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வாக்கு வீழ்ச்சி, மின்சாரக் கட்டணம், வடக்கு காணி சுவீகரிப்பு, 323 சிவப்பு முத்திரை கொள்கலன்கள் விடுவிப்பு,இஸ்ரேலுக்கான அனுமதிகள், கல்வி மறு சீரமைப்பு என பல சர்ச்சைகளில் சிக்கி இவற்றிலிருந்து இன்னும் மீளாத நிலையில், தற்போது ‘கஞ்சா’ சர்ச்சையில் சிக்கியுள்ளது.

இலங்கையில் கடுமையான நிபந்தனைகளின் கீழ், முதன்முறையாக ‘கஞ்சா’ பயிரிடுவதற்கான சட்ட பூர்வ அனுமதி ஏழு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற தகவலை ஆயுர்வேதத் துறையின் முன்னாள் ஆணையாளர் நாயகம் வைத்தியர் தம்மிக அபேகுணவர்தன வெளியிட்டுள்ளதன் மூலமே ‘மாற்றம்’ அரசு தற்போது ‘கஞ்சா’ அரசாக மாறி கடும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளது.

இலங்கையில் கடுமையான நிபந்தனைகளின் கீழ், முதன்முறையாக கஞ்சா (பயிரிடுவதற்கான சட்டப்பூர்வ அனுமதி ஏழு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இலங்கை முதலீட்டு சபையின் கீழ், செயல்படுத்தப்படவுள்ளது. மொத்தம் 37 விண்ணப்பங்கள் வந்த நிலையில், அவற்றில் இருந்து ஏழு முதலீட்டாளர்கள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இலங்கை முதலீட்டு சபை அவர்களுக்கு உரிய சட்ட அனுமதியை வழங்கியுள்ளது.

முதல் கட்டமாக ஒவ்வொரு முதலீட்டாளருக்கும் ஆறு மாதங்களுக்குத் தற்காலிக உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் நடைபெறும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து, உரிமம் நீட்டிக்கப்படுமா என்பதைக் குறித்து அரசாங்கம் தீர்மானிக்கும். ஒவ்வொரு முதலீட்டாளரும் 2 மில்லியன் அமெரிக்க டொலர் பத்திரத்தை இலங்கை மத்திய வங்கியில் உத்தரவாதமாக வைப்பிலிட வேண்டும். பயிர்ச்செய்கைத் திட்டத்தை ஆரம்பிக்க குறைந்தபட்சம் 5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு தேவை.

கஞ்சா பயிரிடப்படும் அனைத்து உற்பத்திகளும் முழுமையாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். நாட்டிற்குள் எந்த விதத்திலும் பயன்படுத்த முடியாது. ஏற்றுமதி நோக்கங்கள் மருந்து உற்பத்தி மற்றும் சோதனைக்காக மட்டுமே. பயிரிடும் பகுதி பாதுகாப்பான வேலியால் சூழப்பட்டிருக்க வேண்டும். விதைகள், இலைகள், வேர்கள் உள்ளிட்ட எந்தப் பகுதியும் வெளிப்புற சூழலுக்குள் வெளியேறக் கூடாது.

வளாகத்தில் சிறப்பு பணிக்குழு மற்றும் பொலிஸ் பாதுகாப்பு கட்டாயம். நில ஒதுக்கீடு மற்றும் கண்காணிப்பு, இலங்கை முதலீட்டு சபையின் கீழ் மீரிகம பகுதியில் 64 ஏக்கர் நிலம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் நடைமுறையை இலங்கை முதலீட்டு சபை, பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சகம், சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் ஆயுர்வேதத் திணைக்களம் இணைந்து மேற்பார்வையிடுகின்றன. இந்த முயற்சியின் மூலம் இலங்கைக்கு கணிசமான அந்நியச்

செலாவணி வருவாய் கிடைக்கும் என அரசாங்கம் நம்புகிறது. ஆயுர்வேதத் துறையின் முன்னாள் ஆணையாளர் நாயகம் வைத்தியர் தம்மிக அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான இலங்கையில் கஞ்சா பயிரிடும் திட்டத்தை அனுரகுமார அரசு முதன்முதலில் கொண்டுவந்திருந்தால் கூட அது பெரியளவிலான சர்ச்சைகளை, விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்காது. ஆனால், கடந்த அரசில் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சராக இருந்த டயனா கமகே இந்த கஞ்சா பயிரிடும் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் ஒரு யோசனையாக முன்வைத்தபோது, அதனை வரிந்துகட்டிக்கொண்டு எதிர்த்தவர்கள் தற்போதைய ஜனாதிபதியான அனுரகுமாரவும் பிரதமரான ஹரிணி அமரசூரியவும் அமைச்சரான விஜித ஹேரத்தும் கஞ்சா ஏற்றுமதி செய்யும் வகையில், கஞ்சா செய்கையை முன்னெடுப்பதற்கான சட்டத்தை உடனடியாக வகுத்து, அதனை சட்டமாக்குமாறு பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி மூலமாக பாராளுமன்றத்திற்குத் தெரிவாகி, ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு ஆதரவு வழங்கி அமைச்சரான டயனா கமகே இந்த யோசனையை 2021ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் முன்வைத்தார். உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் கஞ்சா செய்கை ஊடாக, பாரிய இலாபத்தை பெற்று வருவதாகவும் அவர் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

எனினும், கஞ்சா ஏற்றுமதிக்கான பயிர் செய்கையை மேற்கொள்வது சட்டமாக்கப்படுகின்றமை தொடர்பில் விரிவான கலந்துரையாடலொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்த நிலையில், அனுரகுமர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அதனை கடுமையாக எதிர்த்தது. இலங்கையில் கஞ்சா தடை செய்யப்பட்ட ஒன்று என்ற போதிலும், நாட்டிற்குள் இன்றும் கஞ்சா பயன்பாடு காணப்படுவதாகவும் இந்த நிலையில், கஞ்சா செய்கையை அனுமதித்து சட்டமாக்கும் பட்சத்தில், அது நாட்டிற்குள் மேலும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் சாத்தியம் உள்ளது எனவும் கஞ்சா ஏற்றுமதிக்கு மாத்திரம் அனுமதி தற்போது கோரப்பட்டாலும், எதிர்காலத்தில் உள்நாட்டு பயன்பாட்டிற்கும் அனுமதி கோரப்படும் சாத்தியம் உள்ளது எனவும் இவர்கள் எதிர்த்து வாதிட்டனர்.

கஞ்சா என்பது போதைப்பொருள் கிடையாது என்பதுடன், கஞ்சா என்பது தலைசிறந்த மருத்துவ குணம் கொண்ட மூலிகை. உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் கஞ்சாவிற்கு அனுமதி வழங்கியுள்ளதுடன், பல நாடுகள் கஞ்சா செய்கை செய்து வருகின்றன. அத்துடன், பல நாடுகள் கஞ்சாவை ஏற்றுமதி செய்யும் அதேவேளை, மருந்து வகைகளுக்கும் கஞ்சாவை பயன்படுத்தி வருகின்றன. கஞ்சாவிற்கான கேள்வி, நாளுக்கு நாள் அதிகரிக்கும் உலகில் நோய்கள் என்றுமே குறையாது . அதனால், மருத்துவ குணம் கொண்ட இவ்வாறான மூலிகைகள் அத்தியாவசியமானவை. எதிர்வரும் காலப் பகுதியில் பில்லியன் கணக்கான பணத்தை ஈட்டித் தரக்கூடிய ஒரு ஏற்றுமதி பயிர் செய்கை கஞ்சா. நாடு இன்று பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ள நிலையில், அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள் குறித்து யோசிக்க வேண்டும்.

இது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய போதைப்பொருள் கிடையாது என்பதை உலக சுகாதார நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது. நாட்டில் தற்போது பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய, செய்கை முறையிலான கேரளா கஞ்சா பயன்படுத்தப்படுகிறது. அதுவே பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். கஞ்சா என்பது இலங்கையின் கலாசாரத்துடன் இணைந்த ஒன்று. கஞ்சா செய்கையின் ஊடாக நாட்டிற்கு பாரிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும், கஞ்சாவின் ஊடாக பெரும்பாலான முக்கிய பொருட்களைத் தயாரிக்க முடியும். அழகு சாதன பொருட்கள், மருத்துவ வகைள் என பல்வேறு பொருட்களைத் தயாரிக்க முடியும் எனவும் டயானா கமகே தெரிவித்திருந்தார்.

ஆனால், அப்போது டயனா கமகேயை மிக மோசமாக, தரக்குறைவாக, அவரின் நடத்தை தொடர்பில் கூட, விமர்சித்தவர்கள்தான் தற்போது அவர் பாராளுமன்றத்தில் முன்வைத்த ‘கஞ்சா பயிர் செய்கை’ திட்டத்திற்கு தமது அரசில் அனுமதி வழங்கி அதனை நியாயப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். கஞ்சா செய்கை திட்டம் கடந்த அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட திட்டம். ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கஞ்சா பயிர்ச் செய்கையானது முதலீட்டு அபிவிருத்தி சபையின் திட்டம். இந்த திட்டத்திற்கு அப்போதைய எதிர்க்கட்சியினரும் ஆதரவு வழங்கியிருந்தனர். தற்போதைய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அப்போது எதிர்க்கட்சியில் இருந்தனர், இந்த திட்டத்தின் ஆபத்தான விடயங்களை அப்போது அவர்கள் எதிர்த்தனர். தற்பொழுது அந்த ஆபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் அரசாங்கம் திட்டமிட்டு கஞ்சா செய்கையில் ஈடுபடவுள்ளது என பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவிக்கின்றார்.

‘புதிய திசை’, ‘மாற்றம்’ என்ற கோஷத்தோடு ஆட்சி பீடம் ஏறிய அனுரகுமார அரசு, எந்த புதிய திசையிலும் பயணிக்க வில்லை. எந்த மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. பழைய திசையிலேயே தொடர்ந்தும் பயணிப்பதுடன், பழைய அரசுகள் கொண்டுவந்த போது தங்களினால் கடுமையாக எதிர்க்கப்பட்ட திட்டங்களையே அப்படியே ‘கொப்பியடித்து’ தமது திட்டங்களாக்கி அதனை நியாயப்படுத்தி நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர். இதுவே சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள் முதல் தற்போதைய ‘கஞ்சா பயிர் செய்கை’ வரை முன்னெடுக்கப்படுகின்றது. எனவே, ‘மாற்றம்’ என்பது அனுரகுமார அரசின் வார்த்தையாகவே மட்டும் உள்ள நிலையில் ‘கொப்பி பேஸ்ட்’ மட்டுமே அனுரகுமார அரசின் நடவடிக்கையாக மாறிப்போயுள்ளது. அதாவது நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை, தமது கொள்கையிலிருந்து, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து அனுரகுமார அரசுதான் ‘மாற்றம்’ கண்டுள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

அச்சம், பயம் சஞ்சலம் இவையெல்லாம் ஒரே கருத்தாகத் தோன்றலாம். ஆனால், சதா மனம் குழம்பியபடியே இருப்பது சஞ்சலம். பயம், சில சந்தர்ப்பங்களில் எவருக்கும் நேரலாம். ஆனால், எல்லா விடயங்களுக்கும் தன்னை இழந்திருப்பது அச்சத்தின் வெளிப்பாடாகும்.

சில விடயங்களில் நாம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பட நடந்து கொள்ளவேண்டும். ஒருவன் குடிபோதையில் கத்தியுடன் தன்பாட்டிற்குச் செல்லும்போது அவனை மறித்து உபதேசம் செய்யலாகாது. இது அச்சமற்ற செயல் அல்ல. வீரத்தை எல்லா நேரங்களிலும் காட்டலாகாது.

சும்மா போனவனைச் சண்டைக்கு இழுக்கலாகாது. அதன் விபரீதம் பெரிதாகலாம். அது கோஷ்டிச் சண்டையாகவும் மாறிவிடலாம். சில சந்தர்ப்பங்களில் கோழையும் வீரனாகின்றான். ஒருவரை வலிந்து தொடர்ந்து இம்சித்தால், அவன் சிங்கம் போல எழுந்து தாக்கி வீழ்த்திவிடுவான்.

துன்பமான விடயங்களை எதிர்கொண்டவர்கள் அச்சத்தைத் துச்சமாக்கிவிடுகின்றார்கள். வாழ்க்கையில் துணிவு பிரதானமானது. முன்னேற்றத்தை இது உருவாக்கும்.

பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பல வருடமாக புனரமைக்கப்படாத வீதி

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பொகவந்தலாவ நகரில் இருந்து பொகவந்தலாவ குயினா தோட்டத்திற்குச் செல்லும் மூன்று கிலோ மீட்டர் தூரத்தைக் கொண்ட வீதி சுமார் 20வருடகாலமாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் குறித்த வீதியூடாக போக்குவரத்தினை மேற்கொள்ள முடியாத ஒரு நிலை காணப்படுவதாகப் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருவதாகக் கூறி, பல தடவை மலையக அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், அதற்கான நடவடிக்கையை எவரும் முன்னெடுக்கவில்லை எனவும் தேர்தல் காலத்தில் மாத்திரம் வாக்கு சேகரிக்க வரும் மலையக அரசியல்வாதிகள் தேர்தலுக்குப் பின்னர் இங்கு வருவதும் இல்லை எனவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் இந்த வீதியின் ஊடாக பயணிக்கும் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பொகவந்தலாவ சென்மேரிஸ் தேசிய கல்லூரி மற்றும் ஹோலி ரோசரி ஆகிய பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மூன்று கிலோ மீட்டர் தூரத்தை நடந்து செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

20 வருடங்களாக வாக்குறுதிகளை மாத்திரம் வழங்கி புனரமைக்கப்படாத வீதியைப் புனரமைத்துத் தருமாறு தற்போதைய அரசாங்கத்திடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– எஸ்.சதீஷ்



“வாக்களித்த பிறகு :

# உள்ளூராட்சி மன்றங்களில் ஏ(மா)ற்றமா?”



ஜே.ஏ.ஜோர்ஜ்

“எல்லாம் தேர்தல் கால வாக்குறுதிகள் நம்பி, நானும் காலம் காலமாக இதனைப் பார்த்து வருகின்றேன். அவர்கள் தேர்தலுக்கு முன்னதாக சொல்வது ஒன்று தேரலுக்குப் பின்னர் செய்வது ஒன்று, இதைப் பற்றி கதைத்து வேலையில்லை” - ஒரு 60 வயது முதியவரின் ஆதங்கமே இது.

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிலுள்ள லின்போட் தோட்டத்துக்குச் செல்லும் பாதை வருடக்கணக்கில் செப்பனிடப்படாதவாறு உள்ளதுடன், குறித்த பாதையைத் தார் வீதியாக மாற்றியமைத்துத் தருமாறு மலையகத்தில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் கட்சிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை எந்தவோர் அரசியல்வாதியும் அதனைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

குறித்த வீதியில் உள்ள பாலமொன்று சில வருடங்களுக்கு முன்னர் புனரமைக்கப்பட்ட போது, அந்த வீதியும் புனரமைக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்ட போதும், இதுவரை அதனை செய்யவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் வெளியிடுகின்றனர்.

தேர்தல்கள் காலங்களில் அங்கு வரும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பாதையைப் புனரமைப்பதாக வாக்குறுதி வழங்குவதும், பின்னர் அதனை மறந்துவிடுவதும் காலம் காலமாக நடைபெற்றுவருவதுடன், பாதை சீரின்மை காரணமாக அப்பகுதியில் வாகனங்கள் பயணிப்பதில் பெரும் சிரமம் உள்ளதுடன், அந்தப் பாதையின் ஊடாக பஸ் போக்குவரத்தும் இல்லை என்பதால், முச்சக்கரவண்டியில் பயணம் செய்ய ஒன்று, இரண்டு கிலோ மீற்றர் பயணிக்க 400 ரூபாய் கட்டணமாக அறவிடப்படுவதால், போக்குவரத்துக்கு அதிகப் பணத்தைச் செலவிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தொடர்வதாகத் தோட்டத் தொழிலாளியான கணேசன் தெரிவிக்கின்றார்.

“நாட்டில் இப்போது ஆட்சி மாற்றம் வந்து விட்டது. இதற்கு முன்னர் எமது வாக்குகளைப் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதையைப் புனரமைப்பார்கள் என்று எதிர்பார்த்தோம் அது நடக்கவில்லை. புதிய அரசாங்கத்தின் ஊடாகவாவது அதனைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இருந்தாலும், ஐந்து வருடங்களில் எமது நம்பிக்கை வெறும் நம்பிக்கையாகவே இருந்து விடுமோ என்று தெரியவில்லை” என்கிறார் மோகன்.

இலங்கையில் 2025 மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பிறகு, இன்று மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இத்தேர்தல், பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலையற்ற தன்மை ஆகியவற்றில் இருந்து மீள் எழுச்சிப்பெற்று வந்த நமது நாட்டில், மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் நடைபெற்றது. ஆனால், மக்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா? உள்ளூராட்சி உறுப்பினர்கள் தங்கள் பொறுப்புகளைச் சுயாதீனமாக நிறைவேற்றுகிறார்களா, அல்லது கட்சி அரசியலின் கீழ் செயல்படுகிறார்களா? என்ற கேள்விகளை முன்வைத்தால். அதற்கு இன்னும் சில காலம் தேவை என்பதே பெரும்பாலான மக்களின் கருத்தாக உள்ளது.

இலங்கையில் இழுத்தடிப்பு செய்யப்பட்டு நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள் நாட்டில் பெரும் அரசியல் நெருக்கடியை உருவாக்கிவிட்டதுடன், பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் ஓர் அரசியல் கட்சி தனியாக ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையைப் பெற்றிராத நிலையொன்றைக் காணமுடிந்தது.

அத்துடன், உள்ளூராட்சி தேர்தல்கள் நிறைவடைந்த நிலையிலும், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியமைக்கப்பட்டு நிர்வாக நடவடிக்கைகள் தொடங்குவதற்கு சுமார் ஒரு மாதத்துக்கும் அதிக காலம் இழுபறி நிலையொன்று காணப்பட்டிருந்தது.

தேர்தல் பிரசாரத்தின் போது கடுமையாக எதிர் பிரசாரத்தை மேற்கொண்ட அரசியல் கட்சிகள் வேறு வழியின்றி நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒப்பந்தங்களை மேற்கொண்டு, உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டன.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையை வெற்றிகொண்ட தேசிய மக்கள் சக்தியும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இந்தச் சுழலில் சிக்கிக்கொண்டது. ஏனென்றால் கொள்கைப் பிடிப்புடன் ஏனைய கட்சிகளுடன் கூட்டுச் சேரமாட்டோம் எனக்கூறி வந்த ஆளும் தேசிய மக்கள் சக்தி, ஏனைய கட்சிகளுடன் வாய்மூல ஒப்பந்தம் செய்து பல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றியதை அவதானிக்க முடிந்தது.

மலையகத்தில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு பிரதான கட்சிகள் மக்களை ஏமாற்றி வந்த நிலையில், அந்தக் கட்சிகளைக் கடந்த தேர்தல்களில் மக்கள் புறக்கணித்தனர். இவ்வாறான நிலையில், மக்கள் புறக்கணித்த கட்சிகளுடன் ஆளும் தேசிய மக்கள் சக்தி, கைகோர்த்து சில உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைத்தமை மலையக மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

நாட்டில் இருவரை ஆட்சியில் இருந்தவர்கள் இலஞ்சம், ஊழல், மோசடி செய்ததாகக் கூறிய தேசிய மக்கள் சக்தி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமது இறுக்கமான கொள்கையை கைவிட நேரிட்டது.

மலையகத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக, எதிரணியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏழு உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளதுடன், சில உள்ளூராட்சி மன்றங்களின் துணை தவிசாளர் பதவிகளையும் பெற்றுக்கொண்டுள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில், தேசிய மக்கள் சக்தியின் தலைமையில், தமது பகுதியில் பாரிய அபிவிருத்தி மாற்றம் ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் உள்ளனர்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, மலையக பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்தி தொடர்பில் தொடர்ந்து தனது உரைகளில் குறிப்பிடுவதுடன், அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் மலையக மக்களுக்கு காணி, வீடு மற்றும் பொது வசதிகளைப் பெற்றுக்கொடுத்து, அவர்களுக்கு காணி உட்பட உரிமைகளை வழங்க வேண்டும் என கூறியிருந்தார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் ‘வளமான நாடு அழகான வாழ்க்கை’ என்ற கொள்கைப் பிரகடனத்திலும் மலையக மக்களின் அபிவிருத்தி தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஆட்சி பீடம் ஏறுவதற்கு முன்பதாக மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பிரகடனமொன்றையே வெளியிட்டு இருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், எதிர்வரும் ஐந்து வருடங்களுக்குள் பிரதேச சபைகள் மூலமாக தோட்டக் குடியிருப்புகளில் பல அடிப்படை அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளத் தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பு கிடைத்து உள்ளது.

வருடம் முழுவதும் தொடர்ச்சியான மழை வீழ்ச்சியை எதிர்நோக்கும் மலையத்தில் உள்ள பெருந்தோட்டங்களின் பிரதான வீதிகள் இன்றும் சேறும் சகதியுமாக மழை பெய்யும் நாட்களில் மக்கள் நடந்துசெல்ல முடியாத நிலையிலேயே உள்ளன. இதனால் பாடசாலை மாணவர்கள் மட்டுமல்லாது நோயாளர்கள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் என அனைத்துத் தரப்பினரும் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். கொழும்பு உள்ளிட்ட நகரப்புறங்களில் முச்சக்கரவண்களுக்கு கிலோ மீற்றருக்கு 100 ரூபாய் கட்டணமாக அறவிடப்படும் நிலையில், மலையக பெருந்தோட்டங்களில் அதிகளவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு பிரதான காரணமாக பாதை சீரின்மையை சாரதிகள் சுட்டிக்காட்டுகின்றன.

காணிப் பிரச்சினையும் வீட்டுப் பிரச்சினையும் உட்கட்டமைப்பு பிரச்சினையும் மலையக மக்களின் தீராத பிரச்சினையாகத் தொடர்ந்து இருந்து வரும் நிலையில், பிறப்பு முதல் இறப்பு வரையிலான சேவைகளை வழங்கும் பிரதேச சபையின் தவிசாளராக, உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தாம் நினைத்தால் தமக்குக் கிடைக்கும் நிதியைக் கொண்டு, மக்களுக்கு தேவையான அத்தியாவசிய சிறு வேலைத்திட்டங்களைத் காத்திரமான முறையில் முன்னெடுக்க முடியும்.

ஏனென்றால், ஊழலுக்கு எதிரான நடவடிக்கை எடுப்போம் என்ற ஆட்சியைக் கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில், கடந்த ஆட்சிகளின் போது மேற்கொள்ளப்பட்டது போன்று இம்முறை பிரதேச சபைகளில் ஊழல்களை மேற்கொள்ள முடியாது. அவ்வாறு ஊழல் நடைபெற்றால் தேசிய மக்கள் சக்தியின் மீதான மக்களின் நம்பிக்கையில் அது கைவைத்துவிடக்கூடும்.

கடந்த தேர்தலில் புதிய முகங்களுக்கு வாக்களித்த இளைஞர்கள், ஆட்சி மாற்றத்தின் பின்னரும் காட்சி மாற்றம் தாமதமாகுவதால் ஏமாற்றம் அடைந்துள்ளனர். சமூக ஊடகங்களின் ஊடாக அவர்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது.

இதேவேளை, பழைய அரசியல் கட்டமைப்புகளில் நம்பிக்கை வைத்திருக்கும் மூத்தவர்கள், கட்சி உத்தரவுகளுக்கு அடிபணிந்து செயல்படும் உறுப்பினர்களால் ஏமாற்றமடைந்துள்ள நிலையில், ‘மாற்றம் காலப்போக்கில் வரும்’ என்று நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இத்தேர்தலில் பெண்களுக்கு 25% பிரதிநிதித்துவம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், உள்ளூராட்சி மன்றத்தில் பெண் உறுப்பினர்கள் முடிவெடுக்கும் செயல்முறைகளில் முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

தேர்தலில் வாக்களித்து விட்டோம் ஆட்சி மாற்றம் வந்துவிட்டது. இனி நமக்கென்ன என்று இருக்காமல், வாக்காளர்கள் என்ற ரீதியில், உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடுகளைப் பொதுமக்கள் கண்டறிய வேண்டும். அத்துடன், இளைஞர்கள் அரசியலில் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும். அப்போதுதான் எதிர்பார்த்த சமூக அரசியல் மாற்றங்களைக் காண முடியும்.

அத்துடன், உள்ளூர் தேவைகள் கட்சி நலன்களைக் கருத்தில் கொண்டு முன்னெடுக்காமல் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உள்ளூராட்சி செயல்பாடுகளைக் கண்காணித்து அது தொடர்பான பக்கச்சார்பற்ற தகவல்களை ஊடகங்கள் தொடர்ந்து வெளிக்கொண்டு வர வேண்டும். அப்போதுதான், அரசியலில் மக்களின் பங்களிப்புத் தொடர்ந்து அதிகரிக்கும். இல்லையென்றால், தேர்தல் மற்றும் அரசியல் கட்சிகளின் மீதான நம்பிக்கையின்மை மக்கள் மத்தியில் அதிகரித்து விடலாம்.

இலங்கையில் புதிதாக தெரிவான உள்ளூராட்சி மன்றங்கள், மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற, தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில், அடுத்த தேர்தலில் மக்கள் மீண்டும் ஏமாற்றமடைய வாய்ப்புள்ளது.

‘வாக்கு என்பது வெறும் உரிமை மட்டுமல்ல, மாற்றத்தின் ஆயுதம்’ இந்த உணர்வை மக்கள் மீண்டும் நினைவுகூர வேண்டிய நேரம் இதுவாகும்.

# வெகுவிரைவில் திரையில் INFLUENCER...

INFLUENCER என்ற ஆங்கில திரைப்படம் ஈழத்து சினிமா கலைஞர்களின் முழுமையான பங்களிப்பில் உருவாகியுள்ளது.

இந்த திரைப்படத்தின் பெரும்பாலான காட்சிகள் இலங்கையின் மலையக பகுதிகளிலேயே படமாக்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

தற்போது வெளியாகியுள்ள #INFLUENCER திரைப்படத்தின் டீசர் சினிமா ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த திரைப்படத்தினை பிரபல தமிழ் திரைப்பட இயக்குனர் மிஷ்கின் இயக்கிய ‘துப்பறிவாளன்’ திரைப்படத்தில் பணியாற்றிய இங்கிலாந்து வாழ் ஈழத்தமிழர் திரைப்பட இயக்குனர் நீரோ கில்பெர்ட் இந்த திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

மேலும், மிஷ்கினின் ‘பிசாசு 2’ திரைப்படத்தின் ஒளிப்பதிவாளராக பணியாற்றியுள்ள இங்கிலாந்து வாழ் ஈழத்தமிழர் சிவ சாந்தன் இந்த திரைப்படத்தினை ஒளிப்பதிவு செய்துள்ளமை குறிப்பிடதக்கது.

இந்த திரைப்படத்தின் பிரதான பாத்திரங்களாக இங்கிலாந்தை சேர்ந்த இரு நடிகர்கள் நடித்துள்ளனர். இவர்களோடு இணைந்து இலங்கையின் சிங்கள சினிமாவை சேர்ந்த பிரபல நடிகை துலீக்க மாறப்பன அவர்களும் மலையகக் கலைஞர் நாடக நடிகர் செழியன், மட்டக்களப்பைச் சேர்ந்த பல்துறைக் கலைஞர் அலோசியஸ், வவுனியாவைச் சேர்ந்த ஈழம் சினிமாச் செயற்பாட்டாளர் வனிதா சேனாதிராஜா ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளர்.

INFLUENCER திரைப்படத்தின் நிர்வாக முகாமையாளராக மலையகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் செல்லையா சுதர்ஷன் பணியாற்றியுள்ளார். உதவி இயக்குநர்களாக மலையகத்தைச் சேர்ந்த குமரவேல் தயாநிதிபாபு மற்றும் சுப்பிரமணியம் மகிழதர்ஷன், முருகானந்தன் ருஷாந்தன் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த VS சிந்து அவர்கள் கலை இயக்குநராக பணியாற்றியுள்ளார்.

இந்திய தமிழ் சினிமாவின் பிரபல புகைப்பட கலைஞர் ஹரிஷங்கர் ஜனார்த்தனன் இந்த திரைப்படத்தின் தயாரிப்பாளர்களின் ஒருவராகக் கைகோர்த்துள்ளார். ஈழத்தின் சினிமா செயற்பாட்டாளர் , பல சர்வதேச விருதுகளை வென்ற இயக்குநர் காசிநாதர் ஞானதாஸ் நிறைவேற்றுத் தயாரிப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.


ஏனைய துறைகளில் பணியாற்றிய கலைஞர்களின் விபரங்கள்

* படத்தொகுப்பாளர் (எடிட்டர்): சஜித் ஜெயக்குமார்
* கலை உதவி: கனிஷ்டன்
* நிர்வாக உதவி: தர்ஷி
* ஒளிப்பதிவு உதவியாளர்கள்: கமலதாஸ் நிஷாரிகன், ரவிசங்கர் டிலோஷன்
* ஒப்பனை: ரமணி உள்ளிட்ட பல இலங்கையின்

அனைத்து பகுதிகளையும் ஒன்றிணைக்கும் வகையில் இளம் கலைஞர்கள் பலர் இந்த திரைப்படத்தின் வெற்றிக்காக உழைத்துள்ளனர்.

சர்வதேச தரம் வாய்ந்த ஒரு ஆங்கில திரைப்படத்தின் அனுபவத்தினை சினிமா ரசிகர்களுக்கு கொடுக்க படக்குழுவினர் கடுமையாக உழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

















### மாணவர்களின் மனநலப் பிரச்சினைகளும்

# ஆசிரியர்களின் நெறிமுறைப் பொறுப்புக்களும்



கருப்பையா தனலட்சுமி,
MED (read),
இலங்கை தகவல்
தொழில்நுட்ப கல்லூரி – sliit.

தற்காலத்தில் பாடசாலை மாணவர்கள் பதற்றம், மனச்சோர்வு மற்றும் உணவு கோளாறுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான மனநலப் பிரச்சினைகளை அதிகளவில் வெளிப்படுத்தி வருகின்றனர். இந்தப் பிரச்சினைகள் மாணவர்களின் கல்வி, செயல்திறன் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் கணிசமாக பாதிக்கும்.

## மாணவர்கள் எதிர்கொள்ளும் பொதுவான மனநலப் பிரச்சினைகள்

பதற்றம் - குறிப்பிடதக்க சதவிகித மாணவர்கள் பதற்றக் கோளாறுகளை அனுபவிக்கின்றனர். சில ஆய்வுகள் பாடசாலை மாணவர்களில் 30%இற்கும் அதிகமானோர் பதற்றக்கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக காட்டுகின்றன.குறிப்பாக பல்கலைக்கழக அமைப்புகளில் சமூக பதற்றம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

மனச்சோர்வு - மாணவர்களிடையே மன அழுத்தம் என்பது மற்றொரு பரவலான மனநலப் பிரச்சினை ஆகும். சில அறிக்கைகள் 28% மாணவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகி உள்ளதாக கூறுகின்றன.

உணவு கோளாறுகள் - அனோரெக்சியா (anorexia) மற்றும் புலுமியா (bulimia) உள்ளிட்ட உணவு கோளாறுகளும் மாணவர்களிடையே மனநலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் பொதுவான காரணிகளாக காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் இளமைப் பருவத்தில் ஏற்படுகின்றன.

அதிர்ச்சி மற்றும் PTSD - அதிர்ச்சி வெளிப்பாடு மற்றும் பிந்தைய மன உளைச்சல் சீர்கேடு (PTSD) ஆகியவையும் குறிப்பிடத்தக்க பிரச்சினையாகும். குறிப்பாக மாணவர்கள் அதிர்ச்சிகரமான நிகழ்வுகளுக்கு ஆளான சூழ்நிலையில் இவை ஏற்படுகின்றன.

பிற மனநலக் கவலைகள் - மேற்கூறியவற்றைத் தவிர போதைப்பொருள், துஷ்பிரயோகம், மனநிலைக் கோளாறுகள் மற்றும் கவனக்குறைவு அதிக செயற்பாட்டுக் கோளாறுகள் உள்ளிட்ட பிற மனநலப் பிரச்சினைகளையும் மாணவர்கள் அனுபவிக்கின்றனர்.

## மாணவர் மனநலப் பிரச்சினைகளில் தாக்கம் செலுத்தும் காரணிகள்

கல்வி அழுத்தம் - பரீட்சைகள், காலக்கெடு மற்றும் கல்வி எதிர்பார்ப்புகள் உள்ளிட்ட பாடசாலைகளின் கோரிக்கைகள், மன அழுத்தம் மற்றும் மன சவால்களை ஏற்படுத்துகின்றன.

சமூக தனிமை - மாணவர்கள் தனிமைப்படுத்தலை அனுபவிக்கலாம் குறிப்பாக வீட்டை விட்டு வெளியே அனுப்புவது (பிள்ளைகளை விடுதியில் தங்கவைத்தல்) அல்லது சகாக்களுடன் தொடர்பு கொள்ள சிரமப்படும் போது மாணவர்கள் சமூக தனிமைக்கு உள்ளாகின்றனர்.

நிதி கவலைகள் - குடும்ப வறுமை, பொருளாதார பிரச்சினைகள் போன்ற காரணிகளாலும் மாணவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள்.

வாழ்க்கை அனுபவங்கள் - கடந்த கால அதிர்ச்சி அல்லது கடினமான வாழ்க்கை அனுபவங்கள் என்பனவும் மனநல சவால்களுக்கு பங்களிக்ககூடும்.

## மாணவர்கள் மீதான மனநலப் பிரச்சினைகளின் தாக்கம்

கல்வி செயல்திறன் - கல்வி செயல்திறனை எதிர்மறையாக பாதிக்கலாம். கற்றலில் கவனம் செலுத்துவதில் சிரமப்படுதல், வகுப்புகளை தவற விடுதல், குறைந்த மதிப்பெண்களை பெறுதல் என்பவற்றுக்கு வழிவகுக்கும்.

சமூக உறவுகள் - சமூக உறவுகளை சீர்குலைத்து மாணவர்கள் சகாக்களுடன் இணைவதை கடினமாக்கும்.

ஒட்டுமொத்த நல்வாழ்வு - மனநலப் பிரச்சினைகள் தூக்கம், பசி மற்றும் ஒட்டுமொத்த நல்வாவையும் பாதிக்கும்.

அத்துடன், ஆதரவின்மை, சிகிச்சை அளிக்க பாடாத மனநலப் பிரச்சினைகள், போதைப் பொருள் பாவனை போன்ற காரணிகளையும் குறிப்பிடலாம்.

## மனநலப் பிரச்சினைகளை மாணவர்கள் வெளிப்படுத்தும்போது, ஆசிரியர்களின் நெறிமுறைப் பொறுப்புக்கள்

அதிகரித்த விழிப்புணர்வு -

மாணவர்களிடையேயும் பரந்த சமூகத்தினரிடையேயும் மனநலப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் முக்கியம்.

மேம்படுத்தப்பட்ட ஆதரவு அமைப்பு -

ஆலோசனை ஆதரவு குழுக்கள் மற்றும் சகாக்களின் ஆதரவு உள்ளிட்ட மனநல வளங்களை சிறப்பாக அணுகுவது அவசியம்.

கலங்கத்தை நிவர்த்தி செய்தல் -

மனநலப் பிரச்சினைகளுடன் தொடர்புடைய கலங்கத்தை குறைப்பது, மாணவர்கள் தீர்ப்புக்கு பயப்படாமல் உதவியை நாட ஊக்குவித்தல்.

நல்வாழ்வை ஊக்குவித்தல் -

ஆரோக்கியமான உணவு மற்றும் உடற்பயிற்சி, போதுமான தூக்கம் போன்ற ஆரோக்கியமான பழக்கங்களை ஊக்குவித்தல்.

அடிப்படை பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல் -

கல்வி அழுத்தம் மற்றும் சமூக தனிமை போன்ற மாணவர்களின் மனநல சவால்களுக்கான மூல காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்தல்.

மாணவர்களுக்கு மனநலத்திற்கான சிகிச்சை அளிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சிகிச்சையின் முக்கிய அம்சங்கள் பல உள்ளன. அதாவது சிகிச்சையில் பெற்றோர்களை சேர்ப்பது, பிற வழங்குநர்களுடன் தொடர்பு கொள்வது மற்றும் பின்பற்றலை அதிகரித்தல், தொழில்நுட்பத்தை பயன் படுத்தல், பாடசாலை மாணவர்கள் இருக்கும் வளர்ச்சி நிலை மற்றும் சூழலின் சிறப்பியல்புகளை பற்றி அறிந்துக் கொள்ளல் போன்றவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் UNESCO வினால் வெளியிடப்பட்ட guide lines on school health 2021 இன் கூற்றுப்படி மாணவனின் உடல் , மன, சமூக நலன்கள் முதலிடம் பெற வேண்டும்.

மனநலப் கோளாறுகளை வெளிப்படுத்தும் மாணவர்களை குறைக்கூறாமல் அக்கறையுடன் அனுகி அவரது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை காண முயற்சிக்க வேண்டும்.

WHO இனால் வெளியிடப்பட்ட அறிக்கையில் mental health in school frame work 2020இல் "மாணவர்களுடன் நேர்மையான உரையாடல் மற்றும் உணர்வுகளை புரிந்துக் கொள்ளும் முறை ஒரு ஆசிரியருக்கு அவசியம். இது மாணவனை பாதுகாப்பாக உணரச் செய்யும்" என கூறப்பட்டுள்ளது.

UNICEF இனால் வெளியிடப்பட்ட அறிக்கையில் child protection guide lines 2020இல் "மாணவர் கூறும் தகவல்கள், மாற்றங்கள் மற்றும் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் ஆசிரியர் எழுத்துப் பூர்வமாக ஆவணமாக்க வேண்டும் இது எதிர்கால சட்ட நிர்வாகத் தேவைகளுக்குப் பயன் படும்" எனக் கூறப்பட்டுள்ளது.

ministry of education, Sri Lanka - school counciling policy 2022இல் "ஆசிரியர் நேரடியாக சிகிச்சை அளிக்க முடியாது ஆனால் அந்த மாணவனை ஒரு தொழில் முறை ஆலோசகரிடம் அனுப்ப வேண்டும்" என கூறப்பட்டுள்ளது

மனநலப் பிரச்சினைகளை மாணவர்கள் வெளிப்படுத்தும் போது ஆசிரியர் அப் பிள்ளையை கவனமாகவும் கருணையுடனும் அணுகுதல் வேண்டும். என்பதை carl rogers என்பவர், "அனுபவிப்பவர் கூறும் உணர்வுகளை எதுவும் குறைத்துக் கொள்வதோ மறுப்பதோ கூடாது. அதாவது மாணவர்கள் பகிரும் பிரச்சினை உண்மையானது என்று ஏற்கும் மனப்பான்மையுடன் ஆசிரியர் இருக்க வேண்டும்" என்கிறார்.

எனவே, மாணவர்கள் மனநலப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் போது மாணவர்களை சரியான முறையில் அணுகி அவர்களுக்கு ஏற்றாற்போல, ஆலோசனை வழிகாட்டல்களை வழங்க வேண்டியது ஆசிரியரின் பொறுப்பாகும்.

# கேரம் சாம்பியன்ஷிப்பை வென்ற விமானப்படை



பாதுகாப்பு சேவைகள் விளையாட்டு கவுன்சிலால் 13ஆவது முறையாகவும் ஏற்பாடு செய்த கேரம் சாம்பியன்ஷிப் போட்டி சமீபத்தில் கொழும்பில் உள்ள இலங்கை கேரம் கூட்டமைப்பில் நடைபெற்றது.

இந்தப் போட்டி, முப்படையினரிடையே வளர்ந்து வரும் போட்டி தன்மையையும், கேரம் விளையாட்டின் உயர் தரத்தையும் வெளிப்படுத்தியது, இலங்கை விமானப்படை ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளின் அற்புதமான செயல்திறன், மூலம் கேரம் சாம்பியன்ஷிப் வென்றதுடன் இது 13ஆவது கேரம் விளையாட்டில் வரலாற்று மைல்கல்லை பதித்தது.

இதற்கான விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழாவில் பாதுகாப்பு அமைச்சின் துணை இராணுவ தொடர்பு அதிகாரி பிரிகேடியர் கசுன் அதிகாரி, பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.













### இதோசூர்யூ கராத்தே சம்பியன்ஷிப்

# இலங்கை மாணவர்கள் பங்கேற்பு





17 நாடுகளின் பங்கேற்பில் இதோசூர்யூ(Itosuryu) கராத்தே சர்வதேச சம்பியன்ஷிப் போட்டிகள் ஜப்பானின் சைபா(Chiba) நகரில் 2025 ஒகஸ்ட் 2, 3 திகதிகளில் நடைபெற்றது.
இதில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஆசிரியர் சென்சி அலெக்சாண்டர் உள்ளிட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.









காபூல்

ஆப்கானிஸ்தானில் புலம் பெயர்ந்தவர்களை ஏற்றி சென்ற

# பஸ் தீப்பற்றியதில் 71 பேர் உடல் கருகி பலி

ஆப்கானிஸ்தானில் புலம் பெயர்ந்தவர்களை ஏற்றி சென்ற பஸ் ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் 71 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர் என அந்த மாகாண அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் மேற்கு ஹெராத் மாகாணத்தில் ஒரு பயணிகள் பஸ் புலம் பெயர்ந்தோரை ஏற்றி சென்று கொண்டிருந்தது. அப்போது, டிரைவரின் கட்டுபாட்டை இழந்த பஸ் ஒரு லொறி மற்றும் பைக் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 17 குழந்தைகள் உட்பட 71 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

ஈரான் அகதிகளை ஏற்றிக் கொண்டு காபூல் நகரை நோக்கி பஸ் சென்ற போது, இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த விபத்தில் 71 பேர் உயிரிழந்தனர் என்பதை ஆப்கானிஸ்தான் மாகாண அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.



இந்த விபத்து சமீபத்திய வரலாற்றில் மிகவும் மோசமான போக்குவரத்து பேரழிவுகளில் ஒன்றாகும் என மாகாண அரசாங்க செய்தி தொடர்பாளர் அஹ்மதுல்லா முத்தகி தெரிவித்துள்ளார்.

டோக்கியோ

# 1,600 வகையான பொருட்கள் விற்பனைக்கு தடை

ஜப்பானில் சுமார் 1,600 வகையான உணவுப்பொருட்கள் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது அங்குள்ள ஒரு வணிக வளாகத்தில் காலாவதியான உணவுப்பொருள் விற்பனை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைதொடர்ந்து, கியோட்டோ, ஓசாகா உள்ளிட்ட முக்கிய நகரங்களிலும் தீவிர சோதனை நடைபெற்றது.

அப்போது, 20க்கும் மேற்பட்ட கடைகளில் காலாவதியான பொருட்கள் மீது போலியான ஸ்டிக்கர் ஒட்டி விற்பனை செய்தது உறுதியானது.


இதனையடுத்து, நாடு முழுவதும் சுமார் 1,600 உணவுப்பொருட்கள் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.



வொஷிங்டன்

உக்ரேன் போரை நிறுத்தவே

# இந்தியா மீது வரி விதிப்பு



உக்ரேன் மீதான தாக்குதலை ரஷ்யா தொடர்வதைத் தடுக்கவே இந்தியா மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூடுதல் வரிகளை விதித்ததாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் கூறியதாவது, "ரஷ்யா - உக்ரேன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி ட்ரம்ப் இந்தியா மீது பொருளாதாரத் தடைகள் உள்ளிட்டபிற நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார். ட்ரம்ப் விரைவாக அமைதியைக் கொண்டுவர விரும்புகிறார். நேட்டோ பொதுச் செயலாளர் உட்பட அனைத்து ஐரோப்பிய தலைவர்களும் இது ஒரு சிறந்த முதல் படி என்று ஒப்புக்கொள்கின்றனர். மேலும் ஜெலன்ஸ்கி மற்றும் ட்ரம்ப் இருவரும் பேசப் போவது ஒரு நல்ல விஷயம். இருதரப்பு உறவை பலப்படுத்த அமெரிக்க அரசாங்கம் ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய இரு நாடுகளுடனும் இணைந்து செயல்படுகிறது என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

அமெரிக்காவில் புட்டினுடன் ட்ரம்ப் ஆலோசனை நடத்திய 48 மணி நேரத்தில், ஐரோப்பிய தலைவர்கள் அனைவரையும் வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் சந்தித்தார். எனவே, ஐரோப்பிய தலைவர்கள், ட்ரம்ப்பின் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டதற்கும், இது குறித்த ரஷ்யாவின் நிலைப்பாட்டை தாங்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பை அவர் ஏற்படுத்திக் கொடுத்ததற்கும் அவர்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இது முந்தைய நிர்வாகத்தால் செய்யப்படாத ஒன்று" என்றார்.

புதுடெல்லி

பாடசாலைகளுக்கு

# வெடிகுண்டு மிரட்டல்; மாணவர்கள் வெளியேற்றம்

தலைநகர் டெல்லியில் 50-க்கும் மேற்பட்ட பிரபல பாடசாலைகளுக்கு புதன்கிழமை(20) காலை மின் அஞ்சல் மூலம் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் வெளியேற்றப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் விடுக்கப்பட்டுள்ள மிரட்டலில், 25,000 அமெரிக்க டாலர் நிதியை தர வேண்டும் என்று தெரிவித்திருந்த்தாக டெல்லி பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிகுண்டு மிரட்டலை அடுத்து,




"வெடிகுண்டு நிபுணர்கள் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் பள்ளிகளுக்குச் சென்று சோதனை மேற்கொண்டனர். "முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து மாணவர்கள் மற்றும் ஊழியர்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர். தேடுதல் நடவடிக்கைகள் தொடந்து நடைபெற்று வருகின்றன." என்று டெல்லி பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி

# டெல்லி முதல்வரை அறைந்த நபரால் பரபரப்பு

டெல்லி முதல்வர் ரேகா குப்தா புதன்கிழமை(20) காலை தனது இல்லத்தில் நடந்த மக்கள் குறை தீர் முகாமில் கலந்து கொண்டிருந்தபோது மனு கொடுக்கவந்த நபர் ஒருவர் முதல்வரின் தலை முடியைப் பிடித்து இழுத்து, கன்னத்தில் அறைந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

டெல்லியில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சியை வீழ்த்தி ஆட்சி அமைத்தது பாஜக. முதல்வராக ரேகா குப்தா பதவியேற்றார். அவர் முதல்வராக பதவியேற்றப் பின்னர் தனது இல்லத்தில் மக்களை நேரடியாக சந்தித்து முகாம்களைப் பெறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அந்த வகையில், டெல்லி முதல்வர் ரேகா குப்தா புதன்கிழமை (20) காலை தனது இல்லத்தில் நடந்த மக்கள் குறைதீர் முகாமில் பங்கேற்றிருந்தார். அப்போது அவரை முகாமுக்கு வந்த நபர் ஒருவர் முதல்வரின் தலை முடியைப் பிடித்து இழுத்து, கன்னத்தில் தாக்கியுள்ளார்.

முதல்வரை தாக்கிய அந்த நபரை பொலிஸார் உடனடியாக சுற்றி வளைத்து கைது செய்தனர். முதற்கட்ட விசாரணையின்படி அந்த நபர் 41 வயதான ராஜேஷ் பாய் கிம்ஜி பாய் சக்காரியா என்பது தெரியவந்துள்ளது. அந்த நபர் ராஜ்கோட்டை சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

கூட்டத்தில் முதல்வரின் மீது தாக்குதல்



நடத்தப்பட்டதால் காயம் ஏற்பட்டுள்ளது. தற்போது அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என டெல்லி பொலிஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் டெல்லி பாஜக தலைவர் வீரேந்திரா சச்தேவா, டில்லி காங்கிரஸ் தலைவர் தேவேந்திர யாதவ் உள்ளிட்டேர் கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய மஹராஜ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் முதலாமிடத்துக்கு தென்னாபிரிக்காவின் சுழற்பந்துவீச்சாளர் கேஷவ் மஹராஜ் முன்னேறியுள்ளார்.



அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது போட்டியில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை மஹராஜ் அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை,
1.கேஷவ் மஹராஜ், 2.மகேஷ் தீக்‌ஷன, 3.குல்தீப் யாதவ், 4.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ், 5.ரஷீட் கான், 6.மிற்செல் சான்ட்னெர், 7.மற் ஹென்றி, 8.வனிது ஹசரங்க, 9.இரவீந்திர ஜடேஜா, 10.அடம் ஸாம்பா.

இதேவேளை, பாகிஸ்தானுக்கெதிரான மூன்றாவது போட்டியில் 120 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் ஷாய் ஹோப், துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் ஒன்பதாமிடத்திலிருந்து 2 இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை,
1.ஷுப்மன் கில், 2.பாபர் அஸாம், 3.டரைல் மிற்செல், 4.சரித் அசலங்க, 5.ஹரி டெக்டர், 6.ஷ்ரேயாஸ் ஐயர், 7.ஷாய் ஹோப், 8. இப்ராஹிம் ஸட்ரான், 9.குசல் மெண்டிஸ், 10.ட்ரெவிஸ் ஹெட்

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை,
1.அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய், 2.மொஹமட் நபி, 3.சிகண்டர் ராசா, 4.அஸாட் வலா, 5.மெஹிடி ஹஸன் மிராஸ்.

இந்நிலையில், இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் வேகப்பந்துவீச்சாளர் நாதன் எலிஸ், தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்றாவது போட்டியில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்து 12ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை,
1.ஜேக்கப் டஃபி, 2.அடில் ரஷீட், 3.அகீல் ஹொஸைன், 4.வருண் சக்கரவர்த்தி, 5.அடம் ஸாம்பா, 6.வனிது ஹசரங்க, 7.ரவி பிஷ்னோய், 8.ரஷீட் கான், 9.நாதன் எலிஸ், 10.அர்ஷ்டீப் சிங்க்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை,
1.அபிஷேக் ஷர்மா, 2.திலக் வர்மா, 3.பில் ஸோல்ட், 4.ஜொஸ் பட்லர், 5.ட்ரெவிஸ் ஹெட், 6.சூரியகுமார் யாதவ், 7.பதும் நிஸங்க, 8.டிம் செய்ஃபேர்ட், 9.டிம் டேவிட், 10.யஷஸ்வி ஜைஸ்வால்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை,
1.ஹர்திக் பாண்டியா, 2.டிபேந்திர சிங்க் ஐரீ, 3.மொஹமட் நபி, 4.றொஸ்டன் சேஸ், 5.லியம் லிவிங்ஸ்டன்.

# அவுஸ்திரேலியாவை வீழ்த்திய தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலியாவுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், கெய்ன்ஸில் செவ்வாய்க்கிழமை (19) அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:
நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்கா: 296/8 (50 ஓவ.) (துடுப்பாட்டம்: ஏய்டன் மார்க்ரம் 82 (81), தெம்பா பவுமா 65 (74), மத்தியூ பிறட்ஸ்கே 57 (56), றயான் றிக்கெல்டன் 33 (43), வியான் முல்டர் ஆ.இ 31 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெவிஸ் ஹெட் 4/57, பென் டுவார்ஷுஸ் 2/53, அடம் ஸாம்பா 1/58)

அவுஸ்திரேலியா: 198/10 (40.5 ஓவ.) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 88 (96), பென் டுவார்ஷுஸ் 33 (52), ட்ரெவிஸ் ஹெட் 27 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: கேஷவ் மஹராஜ் 5/33, லுங்கி என்கிடி 2/28, நன்ட்ரே பேர்கர் 2/54, பிரெனெலன் சுப்ராயன் 1/46)

போட்டியின் நாயகன்: கேஷவ் மஹராஜ்.

பாகிஸ்தான் ஒப்பந்தங்கள்:

# பாபர், றிஸ்வான் கீழிறக்கம்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் 2025-26 பருவகாலத்துக்கான ஒப்பந்தங்களில், கடந்த பருவகாலத்தில் ஏ பிரிவிலிருந்த பாபர் அஸாம், மொஹமட் றிஸ்வான் பி பிரிவுக்கு கீழிறக்கப்பட்டுள்ளனர்.



பி பிரிவில் கடந்தாண்டிருந்த பாகிஸ்தானின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் ஷண் மசூட், டி பிரிவுக்கு கீழிறக்கப்பட்டுள்ளார்.

ஏ பிரிவில் எந்தவொரு வீரரும் இடம்பெறவில்லை.

இதேவேளை, அப்ரார் அஹ்மட், சைம் அயூப், ஹரிஸ் றாஃப், சல்மான் அலி அக்ஹா, ஷடாப் கான் ஆகியோர் பிரிவுக்கு முன்னேறியுள்ளார்.

தவிர சுஃபியான் முக்கீம், ஹஸன் நவாஸ், மொஹமட் ஹரிஸுக்கு கடந்தாண்டு ஒப்பந்தமில்லாத நிலையில் இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்தாண்டு இருந்த ஆமிர் ஜமால், கம்ரான் குலாம், மிர் ஹம்ஸா, இர்ஃபான் கான் நியஸாய், உஸ்மான் கான் ஆகியோர் இம்முறை உள்ளடக்கப்படவில்லை.

பி: அப்ரார் அஹ்மட், பாபர் அஸாம், பக்கர் ஸமன், ஹரிஸ் றாஃப், ஹஸன் அலி, மொஹமட் றிஸ்வான், சைம் அயூப், சல்மான் அலி அக்ஹா, ஷடாப் கான், ஷகீன் ஷா அஃப்ரிடி. சி: அப்துல்லாஹ் ஷஃபிக், பஹீம் அஷ்ரஃப், ஹஸன் நவாஸ், மொஹமட் ஹரிஸ், மொஹமட் நவாஸ், நசீம் ஷா, நொமன் அலி, சஹிப்ஸடா பர்ஹான், சஜிட் கான், சௌட் ஷகீல். டி: அஹ்மட் டனியால், ஹுஸைன் தலாட், குராம் ஷஷாட், குஷ்டில் ஷா, மொஹமட் அப்பாஸ், மொஹமட் அப்பாஸ் அஃப்ரிடி, மொஹமட் வஸிம் ஜூனியர், சல்மான் மிர்ஸா, ஷண் மசூட், சுஃபியான் முக்கீம்.


# ஆசியக் கிண்ணக் குழாமில் கில்

ஆசியக் கிண்ணத் தொடருக்கான இந்தியக் குழாமில் அக்ஸர் பட்டேலை உப அணித்தலைவராக பிரதியிட்டு ஷுப்மன் கில் மீள்வருகையைப் புரிந்துள்ளார்.

இதேவேளை, ஜிதேஷ் ஷர்மாவும் குழாமில் இடம்பெற்ற நிலையில் ஷ்ரேயாஸ் ஐயர் குழாமில் இடம்பெற்றிருக்கவில்லை.

ஹர்ஷித் ரானா குழாமில் இடம்பெற்ற நிலையில் பிரசீத் கிருஷ்ணா, வொஷிங்டன் சுந்தர், ரியான் பராக், துருவ் ஜுரேல், யஷஸ்வி ஜைஸ்வால் ஆகியோர் மேலதிக வீரர்களாகக் காணப்படுகின்றனர்.

குழாம்: சூரியகுமார் யாதவ் (அணித்தலைவர்), ஷுப்மன் கில் (உப அணித்தலைவர்), அபிஷேக் ஷர்மா, சஞ்சு சாம்சன், திலக் வர்மா, ஷிவம் டுபே, ஹர்திக் பாண்டியா, ஜிதேஷ் ஷர்மா, அக்ஸர் பட்டேல், ரிங்கு சிங்க், குல்தீப் யாதவ், ஹர்ஷித் ராணா, ஜஸ்பிரிட் பும்ரா, அர்ஷ்டீப் சிங்க், வருண் சக்கரவர்த்தி.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 21, ஓகஸ்ட் 2025, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.